15.10.2025

OS No: 540/2019

வா.சா. 2 திரு. மணிகண்டன் த/பெ சுப்பிரமணியன்.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1987 ம் வருடம் பிறந்தேன். 1987 ம் வருடத்திற்கு முன்பு காளிமுத்தன் வீட்டில் நடந்த விசயங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தாத்தாவான காளிமுத்தன் எந்த வருடம் இறந்தார் என்றால் எந்த வருடம் என நியாபகம் இல்லை அவர் இறந்த போது நான் 11ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். பி.வா.சா.1 எனது தந்தை என்றால் சரிதான். நான், எனது அப்பா அம்மா ஆகியோர் காளையார்கோவிலில் 20 வருடமாக குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். 2011ம் வருடம் முதல் மங்களம் ஊரில் கடை வைத்துள்ளோம். 2011 ம் வருடம் முதல் மங்களம் ஊரில் கடை வைத்துள்ளதை காட்டிட ஆவணம் உள்ளதா அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆவணம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். வாதிகளுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் காளிமுத்தன் கையெழுத்து ஏதும் செய்யவில்லை என நான் குறிப்பிட்டுள்ளதில் மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது அப்பா அம்மா சொல்லி தெரியும். வழக்கிற்காக மேற்படி சங்கதி குறித்து பொய் சாட்சியம் அளித்திட எனது அப்பா அம்மா எனக்கு சொல்லி கொடுத்துள்ளார்கள் என்றால்சரியல்ல. 08.12.2010 ம் தேதிய ஆவணம் எண். 5081/2010 ல் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் மோசடியான ஆவணம் என்றும் அதனை எழுதி கொடுத்திட எழுதி தந்தவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. திருவாயி எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு அம்மாச்சி ஆவார். திருவாயி எந்த வருடம் இறந்தார் என்றால் நான் கடை வைத்ததில் இருந்து 2 வருடங்களுக்குள் இறந்து விட்டார் வருடம் நியாபகம் இல்லை. 20.09.2017 ம் தேதிய பத்திரத்தை எனது தாயாரான வளர்மதி 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்ததாக சொல்வதில் மேற்டி பத்திரத்தில் நான் கையெழுத்து ஏதேனும் செய்துள்ளேனா என்றால்

இல்லை. மேற்சொன்ன 20.09.2017ம் தேதிய கிரைய பத்திரத்தை எழுதி தர எனது தாயாருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை இன்றைய தேதி வரை வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும் 2,3 பிரதிவாதிகள் அனுபவம் செய்திடவில்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் 2ம் பிரதிவாதி காளையார்கோவிலும், 3ம் பிரதிவாதி கொல்லங்குடியிலும் குடியிருக்கிறார்கள். 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.10.15 15:22:27 +0530